www.Padasalai.Net www.TrbTnpsc.com

Sri Kamakshi Vidhyalaya Matric. Hr. Sec. School

# தூத்துக்குடி மாவட்டம்
## மேல்நிலை இரண்டாமாண்டு
## அரையாண்டுப் பொதுத் தேர்வு -2024
## தமிழ் - விடைக்குறிப்புகள்

| வ.எண் | விடை | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|
| | **பகுதி - I** | |
| | அனைத்து வினாக்களுக்கும் விடையளி | 14 x1=14 |
| 1 | (இ) தமது அடையாளத்தை | 1 |
| 2 | (இ) காலையில் பூத்த மல்லிகை மனம் வீசியது | 1 |
| 3 | (அ) உவமைத்தொகை | 1 |
| 4 | (அ) தொல்காப்பியம் | 1 |
| 5 | (இ) இராமன், சுக்ரீவன் | 1 |
| 6 | (அ) செந்தமிழ் செல்வி | 1 |
| 7 | (இ) 4, 1, 2, 3 | 1 |
| 8 | (ஆ) விய + த்(ந்) + த் + உ | 1 |
| 9 | (அ) மணல் அள்ளுதல் | 1 |
| 10 | (அ) தீயினத்தார் | 1 |
| 11 | (ஆ) பக்தவத்சல பாரதி | 1 |
| 12 | (ஆ)மனித நேயம் | 1 |
| 13 | (அ) தாழைமடல் | 1 |
| 14 | (அ) ஒளிர்கின்ற கதிரவன் | 1 |
| | **பகுதி - II பிரிவு - I** | |
| | எவையேனும் மூன்றனுக்கு விடை தருக | 3x2 =6 |
| 15 | நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரம்<br>❖ சூரிய ஒளிபட்டவுடன் நகரம் பட்டை தீட்டியவெள்ளை வைரம் போல காட்சியளிக்கிறது. | 2 |
| 16 | அரசரோடு நட்பு பாராட்டினாலும் செய்யத்தகாதன<br>❖ அரசர்க்குப் பழைமையான நட்புடையவராய் உள்ளோம் எனக் கருதித் தகுதி அல்லாதவற்றைச் செய்தால் அந்த உரிமை தீமையையே தரும். | 2 |
| 17. | இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்களின் புலம்பல்<br>❖ இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள், இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும்<br>❖ இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லையே!<br>❖ வானம் இடிந்து விழவில்லையே!<br>❖ கடல்நீர் வற்றிப் போகவில்லையே!<br>❖ இந்த உலகம் இன்னும் அழியாமல் தாமதிப்பதும் ஏனோ? என வருந்தினர். | 1<br><br>1 |
| 18 | திருமயிலைப் பதிகத்தில் காணப் பெறும் விழாக்கள்<br>❖ ஓணவிழா<br>❖ விளக்குத் திருவிழா<br>❖ திருவாதிரை விழா<br>❖ தைப்பூச விழா<br>❖ கடலாட்டு விழா<br>❖ பங்குனி உத்திர விழா<br>(ஏற்புடைய நான்கு விழாக்கள் எழுதியிருப்பினும் முழுமதிப்பெண் வழங்கலாம்)<br><br>மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) தூத்துக்குடி மாவட்டம் | 2 |

Kindly Send Me Your Study Materials To Our Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net

Sri Kamakshi Vidhyalaya Matric. Hr. Sec. School

| | பிரிவு - 2 | |
|---|---|---|
| | எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: | 2x2 =4 |
| 19 | பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மை<br>❖ ஏற்ற காலம் அறிந்து ஏற்ற இடத்தையும் தெரிந்து ஒரு செயலை மேற்கொள்வது நேர மேலாண்மை ஆகும்.<br>❖ அது போல உரிய காலத்தை அறிந்து பயிர் செய்து சரியான வழிமுறையைப் பின்பற்றினால் நல்ல விளைச்சலைப் பெற முடியும் என்பதே இத்தொடரின் பொருளாகும். | 1<br>1 |
| 20 | நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்துகள்:<br>❖ 'நடைபெற்றியலும் ' 'நடை நவின்றொழுகும்' என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது<br>❖ ஆசிரிய நடைத்தே வஞ்சி., ஏனை "வெண்பா நடைத்தே கலி" என்றும் குறிப்பிடுகிறது.<br>❖ நடை என்ற சொல், தெளிவான பார்வையோடு இங்கு இடம் பெறுகின்றது. | 1<br>1 |
| 21 | மையாடல் விழா<br>❖ சுவடிகளிலுள்ள எழுத்துக்கள் நன்றாகத் தெரிவதற்காகச் சுவடியில் வசம்பு , மஞ்சள் , மணத்தக்காளி இலைச்சாறு , மாவிலைக் கரி , தர்ப்பைக் கரி முதவியவற்றைக் கூட்டிச் செய்த மையை அதில் தடவுவார்கள் இதற்கு மையாடல் என்று பெயர்<br>❖ இப்படி மை தடவிய புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவதனால் அக்ஷராப்பியாசத்தை மையாடல் விழா என்று சொல்வார்கள். | 1<br>1 |
| | பிரிவு – 3<br>எவையேனும் ஏழனுக்கு விடை தருக: | 7x2 =14 |
| 22 | தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக<br>❖ அரங்கன்! வெண்கலம் பாத்திரக்கடை வைத்திருக்கிறார். | 2 |
| 23 | பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக<br>❖ அன்றைக்கு அவனுக்குப் பணம் கொடுத்து உதவியிருக்க வேண்டியது தானே? | 2 |
| 24 | கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக<br>❖ திரையில் கண்டனர், கண்டு கைதட்டினர் மக்கள். | 2 |
| 25<br>அ) | புணர்ச்சி விதி தருக<br>புதுப்பெயல்<br>புதுமை + பெயல்<br>விதி : ஈறுபோதல்<br>இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்<br>(அல்லது)<br><br>மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்)<br>தூத்துக்குடி மாவட்டம் | 1<br>1 |

Sri Kamakshi Vidhyalaya Matric. Hr. Sec. School

| | | |
|---|---|---|
| ஆ) | முன்னுடை<br>முன் + உடை<br>விதி : தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்<br>உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே | 1<br>1 |
| 26<br>அ)<br>ஆ) | மூன்றாவது சீர் அமைத்து எழுதுக<br>❖ நல்லவை செய்யின் **இயல்பாகும்**<br>❖ அவமதிப்பும ஆன்ற **மதிப்பும்** | 1<br>1 |
| 27 | கலைச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் தருக<br>(i)Multiplex Complex - ஒருங்கிணைந்த திரையரங்க வளாகம்<br>(ii) Rubber Stamp - இழுவை முத்திரை | 1<br>1 |
| 28 | விடைக்கேற்ற வினா அமைக்க<br>❖ சாலைகளில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகள் எதற்குப் பயன்படுகின்றன? | 2 |
| 29 | வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக<br>ஆசிரியருக்குக் கீழ்ப்படிதல் என்னும் குணம்,<br>உண்மையானவற்றைத் தெரிந்து கொண்டு<br>அறியாமையினை அகற்றிப் பல நல்லனவற்றைக்<br>கற்றுக் கொடுக்கும் | 2 |
| 30 | வெண்பாவின் ஈற்றுச்சீரில் வரும் வாய்ப்பாடுகள்<br>❖ நாள்<br>❖ மலர்<br>❖ காசு<br>❖ பிறப்பு | 2 |
| | பகுதி III பிரிவு – I<br>எவையேனும் இரண்டனுக்கு விடை தருக | 2x4 =8 |
| 31 | " எங்கிருந்தோ வருகிறது<br>வண்ணத்துப் பூச்சி யொன்று<br>பறவைகளும் வரக் கூடும் நாளை"<br>இடம் : தமிழ் நதி இயற்றிய அதன் பிறகும் எஞ்சும் என்னும் நூலில் அதிசய மலர் என்னும் தலைப்பில் இவ்வரிகள் இடம் பெற்றுள்ளது.<br>பொருள் : பூக்களைத் தேடி வண்ணத்துப் பூச்சி வருவதைப் போல பறவையும் வரும் .<br>விளக்கம்:<br>❖ போரினால் பாதிக்கப்பட்ட நிலத்தில் மொட்டுக்களை விரித்திருக்கிறது பூச்செடி.<br>❖ அச்செடியின் மலரினைக் கண்டு வண்ணத்துப் பூச்சிகள் வருகின்றன.<br>❖ இன்னும் பறவைகளும் நிச்சயமாக வரும் .<br>❖ போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டு வாழ்வதைப் படம் பிடித்துக் காட்டுகிறார் கவிஞர் தமிழ்நதி<br><br>மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்)<br>தூத்துக்குடி மாவட்டம் | 1<br>1<br>2 |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com


| | | |
|---|---|---|
| 32 | ஏதேனும் இரு மெய்ப்பாடுகள்<br>**அழுகை**<br>ஒரு போக்குவரத்துக் காவலர் தனது பணியைச் செய்து கொண்டிருந்தார். அப்போது ஒரு இளைஞன் மது போதையில் வாகனத்தை ஓட்டி வந்தான். அதைக் கண்டு பிடித்த அவர் அவனை அதட்டினார். வழக்கு போடுவதாகச் சொன்னார். ஆனால், அவன் ஐந்நூறு ரூபாய் தாளை எடுத்து நீட்டினான். அப்போது தன் கடமையில் இருந்து தவறிய அந்தக் காவலர், பணத்திற்கு ஆசைப்பட்டு அவனை விடுவித்தார். பிறகு, அவன் வேகமாக வாகனத்தைச் செலுத்தினான். எதிரே வந்த ஒரு குழந்தை மீது மோதினான். அந்த குழந்தை பரிதாபமாக அதே இடத்தில் இறந்து விட்டது. அதைக் கண்ட காவலர் மனம் வருந்தி கதறிக் கலங்கினார். | 2 |
| | **பெருமிதம்**<br>மிக ஏழ்மை நிலையில் வளர்ந்த ஓர் இளைஞன் அரசுப் பள்ளியில் படித்தான்.தந்தையின் நிலையை எண்ணி வருந்தினான். அந்த வறுமை நிலையை மாற்ற விரும்பினான். கடினமாக இரவு பகல் பாராது படித்து சிறியதாக ஒரு நிறுவனத்தில் வேலை வாய்ப்பை பெற்றான். பிறகு தனது படிப்பை விடாது படித்துக் கொண்டே இருந்தான். அதனால் அறிவில் முதிர்ச்சியடைந்தான். பின்னர் பெரிய நிறுவனத்தில் வேலை வாய்ப்பைப் பெற்று பெரும் பதவியை அடைந்தான். அவனது தந்தை பெருமிதம் அடைந்தார். | 2 |
| 33 | குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவர்<br>❖ இராமன் காட்டிற்குச் சென்று துன்புறுவானே என்று குகன் வருந்தினான்.<br>❖ அதை உணர்ந்த இராமன் குகனிடம் நாங்கள் நால்வர் உடன் பிறந்தவர் என்றிருந்தோம்<br>❖ இப்போது உன்னையும் சேர்த்து ஐவர் ஆகின்றோம்<br>❖ பின்னர் கதிரவனின் மகனான சுக்ரீவனுடன் அறுவர் ஆனோம்<br>❖ உள்ளத்தில் அன்பு கொண்டு எங்களிடம் வந்த அன்பான வீடணனோடு எழுவரானோம். என்று கூறினான். | 4 |
| 34 | அதியமானின் ஈகைப் பண்பு<br>❖ அமுதத்தை விட சிறந்த அரிய நெல்லிக்கனியை ஔவைக்கு ஈந்தவன்.<br>❖ சிறுபாணாற்றுப்படையில் கடையெழு வள்ளல்களைப் பற்றிய பாடல்களில் இப்பாடல்.<br>❖ அதியமான் நெடுமான் அஞ்சி என்ற வள்ளல் மலைப்பகுதியில் இருந்து பறித்து வந்த அழகுமிக்க நெல்லி மரத்தின் கனி.<br>❖ உயிர்நிலை பெற்று வாழ உதவும் அமுதத்தின் தன்மையுடையது.<br>❖ அது தனக்கு கிடைக்கப் பெற்ற போது அதனை (தான் உண்ணாமல்) ஔவைக்கு வழங்கியவன்.<br><br>**மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்)**<br>**தூத்துக்குடி மாவட்டம்** | 4 |

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

Sri Kamakshi Vidhyalaya Matric. Hr. Sec. School

| | பிரிவு - 2<br>எவையேனும் இரண்டனுக்கு விடை தருக | 2x4=8 |
|---|---|---|
| 35 | பேரிடர் மேலாண்மை ஆணையம் :<br>❖ நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.<br>❖ புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீவிபத்து , சூறாவளி, பனிப்புயல் , வேதி விபத்துகள் முதலான பேரிடர்கள் நிகழும் போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த ஆணையம் உதவுகிறது.<br>❖ மாநிலம், மாவட்டம் , ஊராட்சி ,சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்துச் செயல்பட இவ்வாணையம் வழிவகைச் செய்கிறது. | 4 |
| 36 | சென்னையின் பண்பாட்டு அடையாளங்கள்:<br>❖ இந்திய சராசரிக் கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்ட பல கட்டடங்கள் சென்னையின் பழமையை இன்னும் பறை சாற்றுகின்றன.<br>❖ தமிழ்நாடு ஆவணக் காப்பகம்<br>❖ எழும்பூர் அருங்காட்சியகம்<br>❖ கோட்டை அருங்காட்சியகம்<br>❖ சேப்பாக்கம் அரண்மனை<br>❖ ரிப்பன் கட்டடம்<br>❖ கன்னிமாரா நூலகம்<br>❖ விக்டோரியா அரங்கு<br>❖ மத்திய தொடர்வண்டி நிலையம<br>❖ எழும்பூர் தொடர்வண்டி நிலையம் | 1<br><br>2<br><br>1 |
| 37 | மயிலை சீனி, வேங்கடசாமியின் நினைவுச் சிறப்பிதழ்கள்<br>❖ மயிலை சீனி, வேங்கடசாமி, 16.12.1900 ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் பிறந்தார்.<br>❖ தமிழ்ப்பற்றாளர், சிறந்த ஆசிரியர், கல்வெட்டு ஆராய்ச்சியாளர்<br>❖ மிகச் சிறந்த எழுத்தாளர்<br>❖ வட்டெழுத்து, கோலெழுத்து, தமிழ் பிராம்மி போன்றவற்றில் புலமை பெற்றவர்.<br>❖ மூவேந்தர்கள் பற்றியும், கொங்கு நாட்டு மன்னர்கள் பற்றியும், துளு நாட்டு மன்னர்கள் , களப்பிரர்கள் மற்றும் இலங்கை குறித்த வரலாற்றையும் பதிவு செய்தவர்.<br>❖ களப்பிரர்கள் காலத்தைப் புதிய கண்ணோட்டத்தோடு ஆராய்ந்தவர்.<br>❖ செந்தமிழ்ச் செல்வி' என்னும் இதழில் கட்டுரைகளை எழுதியவர்.<br>❖ 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியவியலாகப் பேசப்பட்டதை மீட்டுத் திராவிட இயலாக மாற்றியவர்.<br><br>மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்)<br>தூத்துக்குடி மாவட்டம் | 4 |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 38 | ஓதற் பிரிவு:<br>❖ இல்லறம் நடத்தும் காலத்தில் கூட, வேற்று நாட்டுக்குச் சென்று அங்கங்கே உள்ளவருக்கும் , தம்முடைய கல்வியைக் கற்பித்தும் , வாதம் புரிந்தும் வந்தனர்.<br>❖ தாம் முன்பு அறியாதவற்றைக் கூட கற்றும் வந்தார்கள்<br>❖ தொல்காப்பியம் என்னும் பழைய இலக்கண நூலிலும் , பிறவற்றிலும் இங்ஙனம் பிரியும் காலத்தை ஓதல் பிரிவு என்று குறிப்பிடுகின்றது.<br>❖ ஓதற் பிரிவிற்கான கால எல்லை மூன்று வருடமாகும் | 4 |
| | பிரிவு-3<br>(எவையேனும் மூன்றனுக்கு விடை தருக | 3x4=12 |
| 39 | ஏகதேச உருவக அணி<br><br>அணி விளக்கம் : 2 மதிப்பெண்<br>அணிசுட்டல் / சான்று ; 1 மதிப்பெண்<br>பொருத்தம் : 1 மதிப்பெண்<br>அணி விளக்கம்<br>ஒரு செய்யுளில் , ஒரு பொருளை உருவகம் செய்து , அதற்கு இணையான மற்றொரு பொருளை உருவகம் செய்யாமல் விட்டுவிடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.<br>(சான்று)<br>சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்<br>ஏமப் புணையைச் சுடும்<br>பொருத்தம்:<br>சினத்தை நெருப்பாகவும், இனத்தைத் தெப்பமாகவும் உருவகம் செய்த வள்ளுவர், உலக வாழ்க்கையைக் கடலாக உருவகம் செய்யாமல் விட்டுவிட்டார்.<br>(ஏற்புடைய வேறு குறள் எழுதி இருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்) | 4 |
| | (அல்லது) | |
| | அணிசுட்டல் :<br>இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி உவமையணி<br>அணி விளக்கம்:<br>புலவர் தாம் சொல்லக் கருதிய பொருளை வேறொரு பொருளுடன் ஒப்பிட்டுக் கூறுவது உவமை அணியாகும்.<br>உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் மற்றொரு வாக்கியமாகவும் அமைந்து இடையில் போல , போன்ற உவம உருபுகள் வெளிப்படையாக வருவது உவமையணியாகும்.<br>பொருத்தம்:<br>உவமை : குடங்கருள் பாம்போடு உடன் உறைதல்<br>உவமேயம்: உடம்பாடு இலாதவர் வாழ்க்கை<br>உவம உருபு: அற்று<br>இக்குறட்பாவில் உள்ளத்தால் ஒன்றுபடாதவருடன் வாழும் வாழ்க்கையானது, குடிசையில் பாம்புடன் வாழும் வாழ்க்கையோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. எனவே இது உவமை அணி ஆயிற்று.<br><br>மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்)<br>தருமபுரி மாவட்டம் | |



www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 40 | .இலக்கிய நயம் பாராட்டல்:<br>மையக்கருத்து:<br>❖ பாடலில் கருவைக் குறிப்பது மையக்கருத்தாகும்<br>❖ இப்பாடலில் குற்றால மலையின் சிறப்புகளைக் கூறுவதே பாடலின் மையக் கருத்தாகும்<br>நயங்கள் :<br>மோனை, எதுகை , இயைபு , முரண் , அணி , சுவை , சொல், சந்தம்.<br>(மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்கள் எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்) | 4 |
| 41 | பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுதல்.<br>அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை<br>பிறருடைய செயல்களைக் குறை கூறிக்கொண்டே இருந்தால் நம்மோடு யாரும் இருக்கமாட்டார்கள். | 4 |
| | (அல்லது) | |
| | ஆ)முயற்சி திருவினையாக்கும்.<br>முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து செய்தால் வாழ்வில் உயர்வு கிட்டும்.<br>பழமொழி விளக்கம்<br>வாழ்க்கை நிகழ்வு<br>(பொருத்தமான வாழ்க்கை நிகழ்வினை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம். வாழ்க்கை நிகழ்வின்றிக் கருத்து மட்டும் விளக்கியிருந்தால் 2 மதிப்பெண் வழங்கலாம்) | |
| 42 | தமிழாக்கம் தருக:<br>1) எனது மொழியின் எல்லையே; எனது உலகத்தின் எல்லை<br>(2) தவறு செய்வது மனிதனின் இயல்பு; மன்னிப்பது தெய்வ இயல்பு.<br>(3) நேர்மையே சிறந்த கொள்கை.<br>(4) தோல்வியே வெற்றிக்கு முதல் படி<br>(தொடர்புடைய தமிழாக்கம் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்) | 4 |
| 43 | வெண்பாவின் இலக்கணம்:<br>❖ இயற்சீர் வெண்டளை , வெண்சீர் வெண்டளை பிறழாது பா அமைய வேண்டும்<br>❖ ஈற்றடி முச்சீராகவும் , ஏனையடி நான்கு சீராகவும் வரும்<br>❖ ஈரசைச்சீர்கள் , மாச்சீரும் , விளச்சீரும் ( தேமா , புளிமா , கருவிளம் கூவிளம் ) மூவசைச்சீரில் காய்ச்சீரும் (தேமாங்காய் , புளிமாங்காய், கூவிளங்காய் கருவிளங்காய்) வரும்.<br>❖ ஈற்றுச்சீர் நாள் , மலர் , காசு , பிறப்பு ஆகிய வாய்பாடுகளுள் ஒன்றைக் கொண்டு முடியும்<br>❖ செப்பலோசை பெற்று வரும்<br>❖ குறள்வெண்பா , நேரிசை வெண்பா , இன்னிசை வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா , ,இன்னிசை சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா, கலிவெண்பா என ஏழுவகைப்படும்<br><br>மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்)<br>தூத்துக்குடி மாவட்டம் | 4 |

Sri Kamakshi Vidhyalaya Matric. Hr. Sec. School

| | | |
|---|---|---|
| | (அல்லது) | |
| | குறியீட்டு உத்தியின் இலக்கணம் :<br>❖ சுட்டிய பொருளுக்கும் , குறியீட்டுப் பொருளுக்கும் ஏதேனும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும்<br>❖ சுட்டும் பொருள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாக இருத்தல் வேண்டும்.<br>❖ இத்தொடரின் வாயிலாகக் குறியீட்டுப் பொருள், நுண்ணிய முறையில் வெளிப்படுத்தப் பட வேண்டும்.<br>❖ குறியீடு என்பது அகம், புறம் என எல்லா வகைக் கவிதைகளிலும் குறிப்பாக உணர்த்தப் பயன்படும் இலக்கிய உத்தியாகும்.<br>❖ சங்க காலம் தொட்டே தமிழர்க்குக் குறியீட்டுச் சிந்தனை இருந்ததை நம்மால் அறிய முடிகிறது. | |
| | **பகுதி-IV**<br>அனைத்து வினாக்களுக்கும் விடை தருக: | **3x6=18** |
| 44அ) | . எச்.ஏ.கிருட்டிணனார் கிறித்தவக் கம்பர்:<br>முன்னுரை:<br>இரட்சணிய யாத்திரிகம் எச்.ஏ.கிருட்டிணனரால் எழுதப்பட்டது. அவற்றைப்பற்றி இங்கு காண்போம்.<br><br>கிறித்தவக் கம்பர்:<br>❖ இரட்சணிய யாத்திரிகம் என்பதன் பொருள் இறைவனை நோக்கிச் செல்லும் பயணம் என்பதாகும்.<br>❖ ஆன்ம ஈடேற்றத்தை விரும்புபவர் என்பதும் பொருந்தும்<br>❖ இந்நூல் 5 பருவங்களையும் 47 படலங்களையும் கொண்டது.<br>❖ இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கரையிருப்பு என்னும் ஊரில் 1827 ஆம் ஆண்டு ஏப்ரல் இருபத்து மூன்றாம் நாள் பிறந்தார்.<br>❖ இவரது தந்தை சங்கர நாராயணர் , தாய் தெய்வநாயகி அம்மாள் ஆவார்.<br>❖ கிருட்டிணனார் தந்தையிடம் தமிழிலக்கியங்களையும், மாணிக்க வாசகத்தவரிடம் இலக்கணங்களையும் பிலவணச் சோதிடரிடம் வட மொழியையும் கற்றார்.<br>❖ ஜான்பன்யன் ஆங்கிலத்தில் எழுதிய பில்கிரிம்ஸ் புரோகிரஸ் என்னும் ஆங்கில நூலின் தழுவலாக இரட்சணிய யாத்திரிகம் என்னும் நூல் எச்.ஏ.கிருட்டிணப் பிள்ளையால் எழுதப்பட்டது.<br>❖ இந்நூல் வழி நூலாக இருந்தாலும் முதல் நூலாக வைத்துப் போற்றப்பட்டது..<br>❖ எச்.ஏ.கிருட்டிணனார் விருத்தப்பாவில் இரட்சணிய யாத்திரிகத்தை எழுதினார்<br><br>**மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்)**<br>**தூத்துக்குடி மாவட்டம்** | 6 |

www.Padasalai.Net www.TrbTnpsc.com



- இவர் காப்பியச் சிற்றுறுப்பாக படலம் என்பதைப் பயன்படுத்தியுள்ளார். (இரட்சணிய சரித படலம்)
- இந்நூலில் சந்த நயங்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன.
- இவர் கருத்தான உவமைகளை கையாள்வதில் வல்லவர்.

முடிவுரை:

சொல்லாலும் , பொருளாலும், அமைப்பாலும் இரட்சணிய யாத்திரிகம் அமைந்திருப்பதால் எச்.ஏ.கிருட்டிணனாரைக் கிறித்தவக் கம்பர் என்று சொல்வது மிகையாகாது. இவர் 1900 ஆம் ஆண்டு பிப்ரவரி மூன்றாம் நாள் இயற்கை எய்தினார்.

ஆ) (அல்லது)

பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலைகள்

வேடுவர் தலைவன் குகனுடன் கொண்ட உறவு:

- காட்டிற்குச் செல்லும் இராமனுக்கு கங்கையைக் கடக்க உதவுகிறான்.
- அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லை என்பதை நிறுவும் வகையில் இராமன் குகன் நட்பு முகிழ்க்கிறது.
- இராமன் இளவரசனாக இருப்பினும் வேடனான குகனை உடன் பிறப்பாக ஏற்றுக் கொள்கிறான்.

கழுகு வேந்தன் சடாயுவுடன் கொண்ட உறவு:

- இராவணன் சீதையைச் சிறையெடுத்தபோது , கழுகு வேந்தன் சடாயு தடுத்து சண்டையிட்டுக் காயப்பட்டு இறந்து விடுகிறான்.
- தன் தந்தையின் நண்பனாகிய கழுகு வேந்தனைத் தன் தந்தையாகவே கருதி, ஒரு மகனாக இருந்து இறுதிச் சடங்குகளைச் செய்கிறான்.

எளிய முதியவள் சவரியுடன் கொண்ட உறவு:

- சீதையைத் தேடி வரும் இராமனை, சுக்ரீவனுடன் நட்பு கொள்ளுமாறு செய்தவள் சவரி.
- இராமன் , அன்பளாகிய சவரியிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டினான்.

வானரத் தலைவன் சுக்ரீவனுடன் கொண்ட உறவு:

- சீதையைத் தேடி வரும் இராம இலக்குவரைக் கண்ட அனுமன், சுக்ரீவனை அழைத்து வந்தான்.
- ஆசையை அறவே அழித்த சிந்தையான் இராமனும் வானரத் தலைவன் சுக்ரீவனும் அமாவாசைக் காலத்தில் ஒன்றாக இணைந்திருக்கும் சந்திரனையும் , சூரியனையும் ஒத்திருந்தார்கள்.
- இராமன் சுக்ரீவனை நண்பனாக ஏற்றுக் கொள்கிறான்.

மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்)
தூத்துக்குடி மாவட்டம்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

Sri Kamakshi Vidhyalaya Matric. Hr. Sec. School

| | | |
|---|---|---|
| | எதிரியின் தம்பி வீடணனுடன் கொண்ட உறவு:<br>❖ சீதையைக் கவர்ந்து வந்தது தவறென இராவணனிடம் கூறி, இலங்கையை விட்டு வந்த வீடணன், ,இராமன் இருக்குமிடம் வந்து அடைக்கலம் வேண்டினான்.<br>❖ இராமன் அவனை உடன் பிறந்தவனாக ஏற்று இலங்கை அரசை அவனுக்கு உரிமையாக்கினான். | |
| 45 அ) | கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகள்:<br><br>முன்னுரை:<br>கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளில் ஒலிக் கோலங்களும், சொற்களின் புலமும் , தொடரியல் போக்குகளும் முக்கியமானவை. அவற்றைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.<br>ஒலிக்கோலங்கள்:<br>❖ மொழி – சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் உருவாகிறது.<br>❖ கவிதை இசையோடும், இசைக் கருவியோடும் பிறக்கிறது.<br>❖ ஓசையும் , பொருளும் இணைந்து கலை வடிவம் பெறுகிறது.இதனையே பாடலின் ஒலிப்பின்னல் என்கிறோம்.<br>❖ 'கடந்தடு தாளை மூவிருங் கூடி உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே'. என்னும் பாடல் வரிகளில் வல்லின மெய்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.<br>சொற்புலம்:<br>❖ சொல்லில் தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன.<br>❖ சொல்வளம் என்பது, ஒரு பொருள் குறித்து வரும் பல சொல்லாய் , பல பொருள் குறித்து வரும் ஒரு சொல்லாய் வருதலும் உண்டு.<br>❖ முல்லைக் கலியில் காளைகளின் இனம் பற்றிய பல சொற்களும் 'கிடை' என்னும் குறு நாவலில் ஆடுகளின் அடையாளங்களைக் காட்டுகிற , பல பெயர்களும் காணப்படுகின்றன.<br>தொடரின் போக்குகள்:<br>❖ நூலைப் படைத்தவர் பெற்ற உணர்வைப் படிப்பவரும் பெற வேண்டும்<br>❖ கவிதையில் இடம் பெறும் உணர்வுகளுக்கும், செய்திகளுக்கும் ஏற்ப சொற்றொடர்கள் மாற்றி அமைக்கப்படுகின்றன.<br>❖ தமிழில் தொடர் அமைப்பு, எழுவாய் + செயப்படுபொருள் + பயனிலை என்று வருவதே மரபாகும்.<br><br>மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்)<br>தூத்துக்குடி மாவட்டம் | 6 |

www.Padasalai.Net

Sri Kamakshi Vidhyalaya Matric. Hr. Sec. School

| | | |
|---|---|---|
| | ❖ ஆனால் , சங்க இலக்கியங்கள் பலவற்றில் பாடலின் உணர்வுக்கு ஏற்ப தொடரமைப்பு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. சான்றாக நம்பி நெடுஞ்செழியனின் இறுதிச் சடங்கைப் பற்றிய புறநானூற்றுப் பாடலில் தொடரமைப்பு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.<br><br>முடிவுரை:<br>நடை அழகியலைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரமாக உள்ளது. எனவே கவிதையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகள் சங்க இலக்கியங்களில் பரவிக் காணப்படுகின்றன என்பதை அறியலாம்.<br><br>(அல்லது) | |
| ஆ | பண்டைக் காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்கள் இடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகள்:<br>குருகுலம்:<br>நம் நாட்டில் மிகப் பழங்காலத்தில் உபாத்தியாயருடைய வீடே பள்ளிக் கூடமாக இருந்தது. அதைக் குருகுலம் என்பர். கணக்காயரென்பது உபாத்தியாயருக்குப் பெயர்.<br>மன்றங்கள்:<br>ஊர்தோறும் பொதுவான இடத்தில் ஒரு பெரிய மரத்தினடியில் மேடையொன்று அமைக்கப்பட்டிருக்கும். அதை மன்றமென்றும், அம்பலமென்றும் கூறுவர். அதுவே பிறகு திண்ணைப் பள்ளிக் கூடமாக மாறியது.<br>பள்ளிகள்:<br>மரத்தடியில் இருந்த பள்ளிக் கூடங்கள் நாளடைவில் சிறு குடிசைகளாக மாறின. பல இடங்களிலே மடங்களில் பாடசாலைகள் உண்டாயின.<br>பள்ளியென்னும் சொல் ஜைன மடங்களுக்கும், பாடசாலைகளுக்கும் பொதுவான பெயர். பாடசாலைகள் வேறு மடங்கள் வேறு என்ற வேறுபாடின்றி இரண்டும் ஒன்றாகவே கருதப்பட்டதால் பள்ளியென்னும் பெயர் இரண்டிற்கும் பொதுவாக வழங்கப்பட்டது.<br>கல்வித் தொடக்கம்:<br>பண்டைக் காலத்தில் பிள்ளைகளின் ஐந்தாம் வயதில் வித்யாப்பியாசம் செய்யும் பொழுது தாய் தந்தையர் அவர்களை ஆசிரியர்களிடம் அடைக்கலமாகக் கொடுத்து வந்தார்கள்.பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் வைக்கும் காலம் ஒரு பெரிய விசேட நாளாகக் கொண்டாடப்படும்.ஏட்டின் மீது மஞ்சள் பூசிப் பூசித்து பையனிடம் கொடுத்து வாசிக்கச் செய்வார்கள்.<br>முறை வைப்பு<br>உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல அதை மாணாக்கர் பலரும் சேர்ந்து சொல்வதை 'முறை வைப்பு' என்று கூறுவர்.<br>மையாடல் விழா<br><br>மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்)<br>தூத்துக்குடி மாவட்டம் | |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

Sri Kamakshi Vidhyalaya Matric. Hr. Sec. School

சுவடிகளில் உள்ள எழுத்துகள் செவ்வனே தெரிவதற்காக சுவடியில் வசம்பு, மஞ்சள், மணத்தக்காளி இலைச்சாறு அல்லது ஊமத்தை இலைச்சாறு, மாவிலைக்கரி முதலியவற்றைத் தடவுவார்கள்.

இங்ஙனம் மைதடவிப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவதை 'மையாடல் விழா' என்று கூறுவர்

எழுத்துப் பயிற்சி:

பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத அதன் மேல் பிள்ளைகள் எழுதுவார்கள்.

எழுத்துகள் ஒன்றோடொன்று படாமல் வரிகள் கோணாமல் பழங்காலத்தில் எழுதி வந்தனர்.

மனனப் பயிற்சி:

அக்காலத்துப் பாடமுறையில் அடிப்படையான நூல்கள் மனனப் பயிற்சிக்கு உதவின. தமிழில் நன்னூல் , நிகண்டு , காரிகை தண்டியலங்காரம் ,நீதி நூல்கள் முதலியன பாடமாக இருக்கும்.

கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழி மாற்று முதலிய வாய்பாடுகள் பாடமாக இருக்கும்.

எழுத்தாணிகள்:

ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணியை ஊசி என்றனர்.மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி ஆகியவை எழுத்தாணிகளின் வகைகள் ஆகும்.

அன்பினால் அடக்குதல்

ஆசிரியர்கள் மாணவர்களை அன்பினால் வழிப்படுத்தி வந்தனர். அவர்களிடம் இருந்த மரியாதை மாணவர்களுக்குப் பயத்தையும், பக்தியையும் உண்டாக்கியது.

வாதம் புரிதல்:

மிகச் சிறந்த நூல் பயிற்சியுடையவர்கள் அரசவைகளில் வாதம் புரிந்து தம் கல்வித் திறமையை வெளிப்படுத்தினர் என மதுரைக் காஞ்சி எடுத்துக் கூறுகிறது.

சாந்துணையும் கற்றல்:

பல நூல்களையும் பள்ளிக் கூடத்தில் பயின்ற தோடு நில்லாமல் வாழ் நாள் முழுவதும் நம் நாட்டார் பயின்று வந்தனர். "என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு"! எனத் திருக்குறள் கூறுகிறது. எங்கெங்கு ஆசிரியர்கள் இருந்தார்களோ, அங்கங்கே மாணவர்கள் சென்று கற்று வந்தனர்.

ஓதற்பிரிவு:

இல்லறம் நடத்தும். காலத்தில் கூட , வேற்று நாட்டுக்குச் சென்று அங்கு உள்ளோர்க்குத் தம்முடைய கல்வியைக் கற்பித்தும், வாதம் புரிந்து வென்றும் , தாம் முன்பு அறியாதவற்றைக் கற்றும் வந்தனர். தொல்காப்பியம் ஓதற் பிரிவுக்கான கால எல்லை மூன்று ஆண்டுகள் எனக் கூறுகிறது.

(எவையேனும் ஆறு தலைப்புகள் இருப்பினும் முழு மதிப்பெண் வழங்கலாம்)

மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்)
தூத்துக்குடி மாவட்டம்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
Sri Kamakshi Vidhyalaya Matric. Hr. Sec. School

46 அ) ."கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன".

முன்னுரை:

மக்கள் தொகைப் பெருக்கம், நாகரிக வளர்ச்சி , நகரமயமாதல், புலம்பெயர்வு , மனப்பான்மை போன்ற பல்வேறு காரணங்களால் கிராமங்கள் தங்களின் அடையாளத்தை இழந்து வருகிறது என்பதைக் காண்போம்.

மக்கள் தொகைப் பெருக்கம்:

1947 ல் இந்தியா சுதந்திரம் அடைந்த போது ,33 கோடியாக இருந்த இந்தியாவின் மக்கள் தொகை தற்போது 130 கோடியாக உயர்ந்துள்ளது.

இதனால் எண்ணற்ற சிற்றூர்கள் பேரூர்களாக, நகரங்களாக மாற்றமடைந்து வருகின்றன.

நாகரிக வளர்ச்சி:

நாடோடியாக வாழ்ந்த மனிதன் தனக்கெனக் குடியிருப்புகளை ஏற்படுத்தத் தொடங்கினான்.

நகரமயமாதல்:

நகரமயமாதல் என்பது கிராமப்புறங்களில் இருந்து மக்கள் நகரத்திற்குக் குடியேறுவதாகும்.

புலம் பெயர்வு:

மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவாகவும், வேலையின்மை , அடிப்படை வசதியின்மை , ஆடம்பரம் , வணிகம்,கல்வி ,தொழில் போன்ற காரணங்களுக்காகவும், கிராமங்களிலிருந்து மக்கள் அதிகமாகப் புலம் பெயர்கின்றனர்.

இளைய தலைமுறையினரின் மனப்பான்மை:

கல்வி , மருத்துவம் , பிற வசதிகள் நகரத்திலேயே கிடைக்கிறது என்ற தவறான மனப்பான்மை இளைஞனைத் திசை திருப்புகிறது.

முடிவுரை:

இவ்வாறு மக்கள் தொகைப் பெருக்கம் முதலான பல பிரச்சனைகளால் கிராமங்கள் தங்கள் இயற்கை மற்றும் சுகாதாரமான முகவரியை இழந்து வருகின்றன.
(கதையின் சுவை குன்றாமல் சொந்த நடையில் விளக்கமாக எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)

6

(அல்லது)

ஆ சங்ககால புகளூர்க் கல்வெட்டு

முன்னுரை :

கல்வெட்டுகளின் களஞ்சியமான தென்னிந்தியாவில் , அறிஞர் ஐராவதம் மகாதேவன் ஆய்வு செய்த புகளூர்க் கல்வெட்டு , சங்க கால வரலாற்றை நமக்கு அறிந்து கொள்ள உதவுகிறது.

புகளூர்க் கல்வெட்டு

கரூரை அடுத்த புகளூரில் நாட்டான் குன்று உள்ளது. அதன் மீதுள்ள குகைகளுள் ஒன்றில், சேர மன்னர்களைக் குறிக்கக் கூடிய நான்கு வரிகளில் எழுதப்பட்டுள்ள ஒரு பிராம்மிக்கல்வெட்டுள்ளது.

"அம்மண்ணன் யாற்றூர் செங்காயபன் உறைய்
கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்
பெருங் கடுங்கோன் மகன் (இ)ளங்
கடுங்கோ (இ)ளங்கோ ஆக அறுத்த கல்"

கல்வெட்டு உணர்த்தும் வரலாறு:

மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்)
தூத்துக்குடி மாவட்டம்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | இக்கல்வெட்டு கருவூரிலிருந்து ஆட்சி செய்த இரும்பொறை மன்னர்கள் பொறித்தவையாகும்.<br>முதல் வரியில் 'யாற்றூர்' என்னும் இடத்தைச் சார்ந்த சமணத் துறவியான செங்காயபன் வசிக்கும் உறையுள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.<br>'கோ' என்ற சொல் சங்ககாலத் தமிழ் மன்னரின் கல்வெட்டுகள் என்பதை உறுதிப்படுத்தியது.<br>பெருங்கடுங்கோன், 'இளங்கடுங்கோ' 'இளங்கோ' போன்ற தமிழ் மன்னர்களின் பெயர்கள் , தமிழகத்தின் புகளூர்க் கல்வெட்டில்தான் காண முடிகிறது.<br>முடிவுரை:<br>இவ்வாறு சங்க காலம் பற்றிய பல அரிய செய்திகளை அறிந்து கொள்ள புகளூர்க் கல்வெட்டுப் பெரிதும் துணை புரிகிறது.<br><br>(ஏற்புடைய செய்திகளைச் சொந்த நடையில் எழுதியிருப்பின் முழுமதிப்பெண் வழங்கலாம்) | |
| 47)அ | பகுதி-V<br>அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக:<br>புறநானூறு:<br>"அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,<br>வறுந்தலை உலகமும் அன்றே;: அதனால்<br>காவினெம் கலனே ; சுருக்கினெம் கலப்பை;<br>மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்<br>மழுவுடைக் காட்டகத்து அற்றே<br>எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே".(206)<br>- ஔவையார். | 4+2=6<br><br>4 |
| ஆ | திருக்குறள்:<br>எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை<br>செய்ந்நன்றி கொன்ற மகற்கு.<br><br>மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்)<br>தூத்துக்குடி மாவட்டம் | 2 |

www.Padasalai.Net